**சீத்தாவக்க பிரதேச சபை - 2022**

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீத்தாவக்க பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சீத்தாவக்க பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கை

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 24 ஆம் திகதி 2155/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விதிக்கப்பட்ட பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 99 இற்குரிய நிதிக் கூற்றுக்களின் பாதீட்டு தகவல்கள் அதாவது, ஆரம்ப பாதீடு, இறுதி பாதீடு மற்றும் அதற்கிடையிலான பொருண்மையான வேறுபாடுகள் இருக்குமாயின் அவற்றுக்கான காரணங்களை வெளிப்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பாதீடு செய்யப்பட்ட மீதி வேறுபடுவதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள செலவினங்களில் திருப்தி கொள்ளப்படாத அரசாங்கத்தில் இருந்தான கையளித்தல் உரிமை | 2021, 2022 என்ற இரண்டு ஆண்டுகளிலும் பாலம், மதகுகள் மற்றும் வீதிகளுக்காக | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனத்தின் கூறாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அந்த சொத்துக்கள் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்ட பணம் தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தமையால் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | 2019 திசெம்பர் 24 ஆம் திகதிய 2155/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் iv (அ) பகுதியின் 227 ஆவது விதியின் vi ஆம் உப பிரிவின் பிரகாரம் பதிவழித்தல் அங்கீகரித்த அதிகார தரப்பினர் மற்றும் காலப் பகுதியில் அறவிட முடியாததாக பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் பெறவேண்டியவைகளில் பதிவழிக்கப்பட்ட பெறுமதி பொதுவாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும், சபையினால் அங்கீகரிக்கப்படாத மீளாய்வாண்டின் இறுதியில் பதிவழிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 27,365,435 இனை அகற்றுவதற்கான அங்கீகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ரூபா 26,609,446 ஆன கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 755,989 ஆன பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவிகளை அகற்றுவதற்காக பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை பதிவழித்தல் பொதுவாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்குறிப்பு 15-2022 இற்குரிய கட்டிடக் கணக்கு (மூலதன சொத்துக்கள்) ரூபா 10,811,089 வரவாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பேரேட்டில் அந்த கணக்கில் ரூபா 6,223,089 மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 இன் இறுதி கணக்கில் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிட மீதியில் நடைமுறை வேலைக்ககாக செலுத்தப்பட்ட ரூபா 5,229,822 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஆதன வரி பெறுமதி ரூபா 2,454,871 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | பெறவேண்டிய ஆதன வரி மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் முற்பணமாக கிடைத்த ஆதன வரி வருமானம் ரூபா 208,300 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - | ஆதன வரி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய கடை வாடகை ரூபா 468,614 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | கடை வாடகை வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல் செலவினம் ரூபா 1,017,457 மற்றும் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களில் பெறவேண்டிய மீதி ரூபா 1,038,648 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிலையான வைப்புக்களுக்காக வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) நாட்குறிப்பு 15-2022 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளின் பெறுமதி ரூபா 301,094 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) மீளாய்வாண்டில் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 109,901 ஆன வங்கி கடன் வட்டி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கடன் வட்டி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யும் போது பொருத்திகள் ரூபா 595,389 குறைத்தும், கணனிகள் ரூபா 31,237 மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 14,674 தொகை அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) முன்னைய ஆண்டிற்குரியதாக முற்பணமாக கிடைத்த ஆதனங்களுக்கு இடையில் வழங்கப்பட்ட கழிவு ரூபா 180,540 மீளாய்வாண்டின் வழங்கப்பட்ட கழிவுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | கழிவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | 2022 ஒக்டோபர் மாதத்தில் நிர்வாக செலவினம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 229,697 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்ய்பபடாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 31,843,762 ஆக இருந்த போதிலும், அந்த பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 32,886,504 ஆனமையால் மீதிகளுக்கு இடையே ரூபா 1,042,742 வேறுபாடு காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------------<br>நிதிப் பிரமாணம் 571 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,435,723 பெறுமதியான 03 வருடங்களுக்கு மேற்பட்ட நானாவித வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022.12.31 இல் உள்ளவாறு வைப்புப் பதிவேட்டில் ரூபா 12,435,723 மீதியில் 2019.12.31 வரையான வைப்பு மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 119,570,029 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,778,193 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | 34,651 | 39837 | 35,977 | 3,860 | 34,482 | 21,937 | 25,264 | 13,259 |
| (ii) | வாடகை | 43,300 | 33,031 | 31,924 | 1,107 | 32,439 | 22,344 | 27,019 | 1,175 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,266 | 2,448 | 2,448 | - | 3,167 | 2,347 | 2,689 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 301,204 | 202,276 | 186,507 | 15769 | 318,803 | 318,803 | 217,266 | |
| | மொத்தம் | **382,421** | **277,592** | **256,856** | **20,736** | **388,891** | **365,431** | **272,238** | **14,434** |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 272.2 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 256.8 மில்லியன் வரை ரூபா 15.4 மில்லியனால் குறைவடைந்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சபை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முயற்சித்தல் வேண்டும். |
| (ஆ) **வாடகை**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை, வருமானம் ரூபா 847,320 இனை அறவிடுவதற்கு | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | **நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 70,000,000 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 241,114,873 ஆகவும் காணப்பட்டது. | உரிய தகவல்கள் பட்டோலைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | **கிடைக்கவேண்டிய மாகாண சபை பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மாகாண சபை மற்றும் பண்முகப்படுத்தப்பட்ட உதவிகள் ரூபா 19,249,118 கிடைக்க வேண்டியிருந்தது. | 2021.12.31 ஆம் திகதி வரை நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 32,838,959 தொகையில் 2023.01.01 ஆம் திகதி முதல் 2023.04.06 ஆம் திகதி வரை ரூபா 13,589,841 கிடைக்கப் பெற்றுள்ளது. | மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | WPPE-6879 ஆம் இலக்க கெப் வண்டி 2022 மே மாதம் 09 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டதன் காரணமாக ரூபா 3,838,000 தொகையில் அந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இருந்து ரூபா 3,000,000 உச்ச அளவின் கீழ் உரித்தினை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி | சபைக்குச் சொந்தமான WPPE-6879 ஆம் இலக்க கெப் வண்டி ரூபா 3,838,000 தொகையில் பழுதுபார்க்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் மீண்டும் கையளிப்பதற்கு இணங்கியதன் அடிப்படையில் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி N.I.G மோட்டர்ஸ் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 1,000,000 முற்பணத் தொகை 2022 | இணங்கப்பட்ட பிரகாரம் வாகனத்தைப் பழுதுபார்த்து நட்டத்தை மதிப்பீடு செய்து உரிய தரப்பினர் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய கராஜிற்கு ரூபா 1,000,000 முற்பணம் செலுத்தி 09 மாத காலம் கடந்திருந்த போதிலும், அந்த பழுதுபார்த்தல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபத்து ஏற்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும், நிதி பிரமாணம் 104(1),(2),(3),(4) பிரிவுகளின் பிரகாரம் குறித்துரைத்த காலப் பகுதியில் உரிய தரப்பினருக்கு முறையான பரிசோதனை அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆகஸ்ட் 12 ஆம் திகதி உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ரூபா 3,000,000 உச்ச அளவின் கீழ் உரித்தினை செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. அவ்வப்போது அறிவிக்கப்பட்ட போதிலும், பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்து கெப் வண்டி சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன், நிறுவனத்தின் உரிமையாளருக்கு எதிராக 2023 மார்ச் 31 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஐந்து நூலகங்களில் ரூபா 87,554 பெறுமதியான 338 நூலக புத்தகங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணாமல் போயிருந்தது. | 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நூலக புத்தகங்களின் மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 87,554 பெறுமதியான 338 புத்தகங்கள் தொலைந்து போயிருந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாட்டை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 39,276,547 ஆகும். | 2021.12.31 வரை கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 39,276,547 ஆன தொகை 2023 ஆம் ஆண்டின் போது செலுத்த வேண்டியிருந்தமையால் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரை அபிவிருத்தி | சபைக்குச் சொந்தமான 2020 ஆம் ஆண்டில் இருந்து 2022 திசெம்பர் 31 வரை சபை | மூலதன மானியங்களை இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளுக்காக கிடைத்த ரூபா 167,318,953 பெறுமதியான மூலதன மானியங்களில் சபைக்கு உரித்தான மூலதன மானியப் பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊடாக கிடைத்த ரூபா 167,318,953 பெறுமதியான மூலதன மானியங்களில் சபைக்கு உரித்தான மூலதன மானிய அளவினை இனங்கண்டு 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்குகளில் சீராக்கப்படும். | கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதுக்க பொது விளையாட்டரங்கின் நிலத்தின் பௌதீக உரித்து 2011 பெப்ரவரி 24 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையனால் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும், 11 வருடங்கள் கடந்திருந்த போதும், அதன் முழுமையான உரிமைத் தன்மை இதுவரை சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டரங்கின் முழுமையான உரித்தை சபைக்கு கையளிக்குமாறு கோரப்பட்ட போதிலும், இதுவரை அது மேற்கொள்ளப்படவில்லை. சபையினால் விளையாட்டரங்கு பராமரிக்கப்படுவதுடன், வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை பெற்றுக் கொள்ளல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கையேற்கும் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக மலசல கூட நிதி உதவி வழங்குவதற்கு ரூபா 2,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 270,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | பொருட்களின் விலை எண்ணிக்கை உயர்வடைந்து சென்றமையால் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதியளவாக இருக்கவில்லை. | இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திட்டத்தின் 04 பல்வேறு பணிகளுக்காக ரூபா 7,600,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 2,513,469 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் நிதி செயலாற்றல் 33 சதவீதமாக இருந்தது. | பயிற்சி செயலமர்வுகளை குறைவாக நடத்தியமையும், சிகிச்சைகளுக்காக தாய்மார்களின் வருகை குறைவடைந்தமையும், செலவினங்களை வரையறுக்கும் சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமையும் மற்றும் கொரோனா பரவுதல் குறைவடைந்தமையினால் மருந்து தொகுதிகளை பகிர்ந்தளிக்காமையின் அடிப்படையிலும் செலவின சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |